# *20. தெய்வம்.*

### *அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**பூ**வெலாம் போற்றுந் தெய்வம் பொதுநடு நடிக்குந் தெய்வந்
தேவெலா மேத்துந் தெய்வஞ் சிவப்பொரு ளெனுமா தெய்வந்
தாவெலாந் தபுக்குந் தெய்வந் தனிச்சுக மிசைக்குந் தெய்வ
மாவதைப் பழிச்சி மாயா வயனமாய் வகற்று வேனே. 1

**இ**தரமொன் றில்லாத் தெய்வ மியாதினுங் கிளரோர் தெய்வம்
விதரணக் கடலாந் தெய்வம் விகிர்தம தணவாத் தெய்வம்
உதரமுற் றுதியாத் தெய்வ மொளிவெளி மயமாந் தெய்வ
மதனையே பழிச்சி மாயா வயனமாய் வகற்று வேனே. 2

**மோ**னமா டுடையார் தெய்வ மோகத்தார் தெரியாத் தெய்வம்
வானநா டுடையார் தெய்வ மனதுரைக் கடங்காத் தெய்வம்
ஞானமே வடிவாந் தெய்வ நடுவெளிக் குகனாந் தெய்வ
மானதைப் பழிச்சி மாயா வயனமாய் வகற்று வேனே. 3

**நா**குழூப் பணையாத் தெய்வ நசையுநர்ப் புரந்தா டெய்வம்
பாகினு மினிதாந் தெய்வம் பரசுமெ னாசைத் தெய்வம்
யோகிகள் குரங்குந் தெய்வம் யுகளமன் றொன்றாந் தெய்வ
மாகுமோர் குகனை யேத்தி யயனமாய் வகற்று வேனே. 4

---

1. **பூ** = பூமி.

**பொதுநடு நடித்தல்** = உயிரைநடாத்துங்காரியம்; **தகராலயரகசியங்** காண்க.

**இசைத்தல்** = பெருங்கொடை; **பி-நிகண்டு. அயனம்** = வழி; பிறக்கும் வழியென்க.

4. **குரங்கல்**= தாழ்தல்; “குரங்க லிறைஞ்சல் கூறுப தாழ்தல்” என்பது **சேー திவாகரம்.**

**ஆ**மய மடையாத் தெய்வ மறிவினுக் கறிவாந் தெய்வம்
ஓமுரைப் பொருளாந் தெய்வ முயிரினுக் குயிராந் தெய்வம்
பாமரஞ் செகுக்குந் தெய்வம் பவக்கடல் கடத்துந் தெய்வ
மாமொரு குகனை யேத்தி யயனமாய் வகற்று வேனே. 5

**ந**னவினர் தெரியாத் தெய்வ நாதநா தாந்த தெய்வங்
கனவினர் காணாத் தெய்வங் கருணிலைக் கெட்டாத் தெய்வஞ்
சினமெது மணவாத் தெய்வஞ் சிவக்கொழுந் தாமா தெய்வம்
எனுமொரு பொருளைப் போற்றி யிகலிட ரகற்று வேனே. 6

**அ**ன்பருக் கருளுந் தெய்வ மளப்பிலா வறிவு தெய்வந்
தன்பணை யறியாத் தெய்வஞ் சகசசித் தாந்த தெய்வம்
இன்பரு ளியற்கைத் தெய்வ மெனைக்கொளும் விழுப்பத் தெய்வம்
என்பதை யிறைஞ்சி யேத்தி யிகலிட ரகற்று வேனே. 7

**அ**ன்னையா யணைத்தா டெய்வ மளிவலைப் படுமோர் தெய்வங்
கன்னலி னினிக்குந் தெய்வங் கருத்தினைக் கவருந் தெய்வம்
என்னுளே யிருக்குந் தெய்வ மியாதினும் வலதாந் தெய்வந்
தன்னையே யிறைஞ்சி யேத்திச் சனனமாய் வகற்று வேனே. 8

**எ**ன்றுமோர் படித்தாந் தெய்வ மிரண்டினு மேலாந் தெய்வம்
மன்றிலே நடிக்குந் தெய்வம் வரதசா கரமா தெய்வம்
நன்றினு நலஞ்சா றெய்வ நகுமொளிப் பிழம்பாந் தெய்வம்
ஒன்றையே சூழ்ந்து கண்டென் னுறுகட்சூ ரகற்று வேனே. 9

**மா**தவர் மகத்தாந் தெய்வ மறைமுடி வுரைத்தா டெய்வம்
ஆதர வாமா தெய்வ மாபத்துக் குதவோர் தெய்வந்
தீதெலாஞ் சீக்குந் தெய்வந் திருப்புகழ் தெரித்தான் றெய்வம்
யாததை யிறைஞ்சி யேத்தி யாப்பளு ரகற்று வேனே. 10

---

5. **செகுத்தல்** = கொல்லுதல்; "செகுத்தல் வதைத்தல் கொல்லுதல் செப்பும்" என்பது **பி - நிகண்டு.**

7. **பணை** = பெருமை.

10. **சீத்தல்** = தூய்தாக்கல்.